## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(20.07.2024 முதல் 24.07.2024)

அறிக்கைஎண்: 32/2024 தேதி : 19.07.2024

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 27 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (20.07.2024 முதல் 24.07.2024).

| கடந்த வார வானிலை (16.07.2024 முதல் 18.07.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (20.07.2024 முதல் 24.07.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/07 | நாள்-2 17/07 | நாள்-3 18/07 | தேதி | நாள்-1 20/07 | நாள்-2 21/07 | நாள்-3 22/07 | நாள்-4 23/07 | நாள்-5 24/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 6 | 4 | 5 | 0 | 0 |
| 35 | 33 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 37 | 37 | 37 |
| 25 | 26 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 27 | 27 | 27 |
| 8 | 8 | 8 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 5 | 5 |
| 84-55 | 64-45 | 67-49 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 64-48 | 64-48 | 60-50 | 60-50 | 60-50 |
| 8 | 11 | 15 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 25 | 25 | 22 | 25 | 22 |
| வட வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 20.07.2024 முதல் 22.07.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 64 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 48 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 22 - 25 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| | காற்றினால் ஏற்ப்படக் கூடிய ஈரப்பத இழப்பினைக் குறைக்க, நீர் பாசனத்தினை அதிக அளவில் பாய்ச்சவும் |

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம். |
| கால்நடைகளுக்கு | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் வருவதற்க்கு வாய்ப்புள்ளது எனவே கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

காற்றினால் ஏற்ப்படக் கூடிய ஈரப்பத இழப்பினைக் குறைக்க, நீர் பாசனத்தினை அதிக அளவில் பாய்ச்சவும்

**இயக்குநர்**